# கிறிஸ்துவின் அவதாரம் பற்றிய தவறான கொள்கைகள்

1. **எபியோனியர்**

இவர்கள் கிறிஸ்துவின் தெய்வத்தன்மையை மறுப்பார்கள். அவர் யோசேப்பு மற்றும் மரியாளிவின் மகன்தான் என்று சொல்வார்கள். ஞானஸ்நானவேளையிலே ஆவியானவர் இயேசுவின்மேல் இறங்கியபோது அவர் மேசியாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது இவர்களுடைய கொள்கை.

2. **ஞானக் கொள்கை** (Gnosticism)

இவர்கள் கிறிஸ்துவின் மனிதத்தன்மையை மறுப்பார்கள் காரணம்!

- தேவன் ஒருபோதும் மாம்சமாகமுடியாது என்பார்கள்.
- இவர்களில் சிலர் கிறிஸ்துவின் அவதாரதோற்றம் வெறும் மாயக்காட்சி என்பார்கள்.
- இவர்களில் இன்னும் சிலர் இயேசு ஞானஸ்நானம் எடுத்தபோது அவரில் கிறிஸ்து வந்தார் என்று சொல்வார்கள்.

இது எல்லாமே கிறிஸ்துவினுடைய தெய்வத்தன்மையை மறுக்கிறது. ஆனால் யோவான் இதை எல்லாவற்றையும் மறுத்து எழுதியிருக்கிறார்.

- ➢ ஆதிமுதலாய் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டுப்பார்த்ததுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம் (1 யோவான் 1:1). அவர் திடீரென வந்தவர் அல்ல ஆதியிலேயே இருந்தவர் என்று யோவான் விளக்குகிறார்.
- ➢ மேலும் இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? (1 யோவான் 2:22) என்றும் கூறுகிறார்.
- ➢ அதேபோல தேவஆவியை நீங்கள் எதினாலே அறியலாமென்றால்: மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; (1 யோவான் 4:2,3) என பார்க்கிறோம்.
- ➢ இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான் (1 யோவான் 5:1).

எனவே இயேசுவானவர் கிறிஸ்து என்பதுதான் வேதத்தின் கொள்கையாக இருக்கிறது அதை அறிக்கை செய்யாதவர்கள் பொய்யர்கள் ஆவர்.

3. **அரியேனியர்கள்** (Arianism)

இவர்கள் இயேசு கிறிஸ்துவின் மானிட அவதாரத்துக்கு முன்புள்ள நிலை அதாவது கர்த்தருடைய தூதனானவர் என்பதை ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் அவருடைய தேவத்தன்மையை மறுத்து, தேவனுக்கு சமமாக கிறிஸ்துவை அங்கீகரிக்கமுடியாது என்று சொல்வார்கள். அவர்களுடைய கொள்கையின்படி கிறிஸ்து சிருஷ்டிகர் அல்ல அவர்

சிருஷ்டிக்கப்பட்டவர். 'சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று' என்கின்ற வசனத்திற்கு அவர்கள் கொடுக்கிற தவறான விளக்கம் என்னவெனில்: தேவன் கிறிஸ்துவை சிருஷ்டித்தார்; கிறிஸ்து மூலமாக அனைத்தும் சிருஷ்டிக்கப்பட்டது என்று சொல்லுகிறார்கள். இவர்கள் தற்கால யெகோவா சாட்சிகளுக்கு முன்னோடிகளாக காணப்படுகிறார்கள்.

**4. அப்போலினேரியன்ஸ் (Appollinarianism)**

இவர்கள் கிறிஸ்துவுக்கு மனிதத்தன்மை உள்ள ஆத்மாவும் சரீரமும் உண்டு; ஆனால் ஆவி மட்டும் தேவத்தன்மை உள்ளதாக இருந்தது என்று கூறுகிறார்கள். இது கிறிஸ்துவின் முழு மானிடத்தன்மையையும் மறுக்கிறது. அதுவே இது ஒரு தவறான கொள்கையாக இருக்கிறது.

**5. நெஸ்டோரியன்ஸ் (Nestorianism)**

இவர்கள் கிறிஸ்துவானவர் பாதி மனிதனாகவும் பாதி கடவுளாகவும் அதாவது 50% மனிதனாகவும் 50% கடவுளாகவும் இருந்தார் என்று சொல்லுகிறார்கள். இது கிறிஸ்துவின் முழுமையான தெய்வீகத்தன்மையையும் முழுமையான மனிதத் தன்மையையும் மறுப்பதால் இதையும் நாம் மறுக்கிறோம்.

**6. யுடிகேயர்கள் (Eutichianism)**

இவர்கள் கிறிஸ்து தெய்வத்தன்மையும் மனிதத்தன்மையும் கலந்த ஒரு மூன்றாவது ஆள்த்தன்மை கொண்டவர் என்று வித்தியாசமாக சொல்லுகிறார்கள். இது கிறிஸ்துவின் ஆள்த்தன்மையை தவறாக விளக்குகிறது ஆகவே, இந்த கொள்கையும் தவறானது என்று ஒதுக்கி விடுகிறோம்.

**7. கிறிஸ்து ஒருவரே (Only Jesus)**

இவர்கள் பிதாவும், பரிசுத்த ஆவியும், கிறிஸ்துவும் தனித்தனி ஆள்த்தன்மைகள் அல்ல என்கிறார்கள். மூவரும் கிறிஸ்துவுக்குள்ளாக அடக்கமாக இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இந்தக் கொள்கையானது வேதபுத்தகத்தின் திரியேகத்துவத்தை மறுக்கக்கூடியதாக இருக்கிறது.

**8. கிறிஸ்துவைப் பற்றிய வேதத்தின் சரியான கொள்கை**

- கிறிஸ்து ஒரே நேரத்தில் முழுமையான தேவனும் முழுமையான மனிதனாகவும் இருக்கிறார்.
- பிதாவுக்கு சமமானவர் பாவம் தவிர எல்லாவற்றிலும் மனிதனுக்கு நிகரானவர்.
- தேவத்துவத்தில் நித்திய குமாரன். அநேகர் அவர் பிறந்தபிறகுதான் குமாரன் என நினைக்கிறார்கள் ஆனால் அவர் பிறப்பதற்கு முன்னாலேயே குமாரன்தான். ஆகவே அவருடைய குமாரத்துவம் நித்தியமானது. ஆனால் மனித நிலையில் கன்னி மரியாளின் வழி பிறந்தவர் (வந்தவர்)
- அவருடைய தேவத்தத்துவத்தையும் மனிதத்துவத்தையும் பிரிக்க முடியாது.
- ஒன்றாக கலந்து உருவான இன்னொரு ஆள்த்தன்மை உடையவர் அல்லர்.

கிறிஸ்து பெத்தலகேமில் பிறந்தது அசாதாரணமான ஒரு பிறப்பன்று
கிறிஸ்து பூமிக்குரிய சரீரத்தில் உருவாகியதாகும். அவர் சரீரத்தில்
உருவாகியது ஒரு நித்திய திட்டமாகும்.
தற்போதும் அவரால் சரீரத்துடன் தோற்றம் அளிக்க முடியும்
அவரது பிறப்பு அற்புதமானதும் தனித்துவம் வாய்ந்ததுமாகும். இதை வேறு
எதன்மூலமும் விளக்குவது கடினம் எனவே அவர் அதிசயம் (நியா 13:18).
எனவே நாம் யாரைப்பற்றி படிக்கிறோமோ யாரை வணங்குகிறோமோ
யாரை பின்பற்றுகிறோமா யாரை அறிவிக்கிறோமோ அவர்
அதிசயமானவர்.